உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 28 வெள்ளிக்கிழமை (12.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :166

12 MAY 2006
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

# வடமராட்சிக் கடலில் டோறா மூழ்கடிப்பு!

## 20 கடற்படையினர் உயிரிழப்பு 700 பேர் மயிரிழையில் தப்பினர்



யாழ்ப்பாணம்,மே12

வடமராட்சிக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில், கடற்படையினரின் அதிவேக டோறா தாக்குதல் படகு மூழ்கடிக்கப்பட்டது. மற்றொரு டோறா சேதமானது. இதில் 20 கடற்படையினர் பலியாகினர்.

திருமலையில் இருந்து படையினரை ஏற்றிவந்த துருப்புக்காவிக் கப்பல் ஒன்றுக்குப் பாதுகாப்பாகப் பயணித்துக்கொண்டிருந்த டோறாப் படகுகளே அடிவாங்கின. சண்டை நடந்துகொண்டிருந்தபோது துருப்புக்காவி கப்பல் இந்துமா கடல் பிராந்தியத்திற்குள் தப்பிச் சென்றது. பின்னர் இந்திய கரையோரக் காவல் படைப் படகுகள் துணையுடன் கரைசேர்ந்தது.

நேற்றுமாலை 4 மணியளவில் வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் வைத்தே டோறா மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

710 படையினரை ஏற்றிக்கொண்டு திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு வந்துகொண்டிருந்த 'பேர்ள் குருசர்' என்ற துருப்புக் காவி கப்பலுக்குப் பாதுகாப்பாக இரு டோறாப் படகுகள் வந்துகொண்டிருந்தன. திடீரென அவற்றின் மீது விடுதலைப் புலிகளின் படகுகள் தாக்குல் நடத்தின. இதில் ஒரு டோறாப் படகு கடலில் மூழ்கியது. மற்றைய டோறா பாதிப்புக்குள்ளானது.

மூழ்கிய படகில் இருந்த 18 படையினரைக்காணவில்லை என்று அரசு அறிவித்துள்ளது. அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்றே நம்பப்படுகின்றது. சுமார் 2 மணி

(8ஆம் பக்கம் பார்க்க)

### தமிழகத் தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்.........!



**தி.மு.க. கூட்டணி**

| | | |
|---|---|---|
| தி.மு.க. | - | 103 |
| காங்கிரஸ் | - | 35 |
| பா.ம.க. | - | 17 |
| இந்திய கம்யூனிஸ்ட் | - | 08 |
| மார்க்ஸிச கம்யூனிஸ்ட் | - | 09 |
| **கூட்டணி - மொத்தம்** | - | **172** |

**அ.தி.மு.க. கூட்டணி**

| | | |
|---|---|---|
| அ.தி.மு.க. | - | 53 |
| ம.தி.மு.க. | - | 05 |
| விடுதலைச் சிறுத்தைகள் | - | 02 |
| **கூட்டணி - மொத்தம்** | - | **60** |

**தே.தி.மு.க.**

| | | |
|---|---|---|
| (விஜயகாந்த் கட்சி) | - | 01 |
| சுயேச்சை | - | 01 |
| **மொத்தம்** | - | **234** |

(விரிவான செய்தி, படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## புலிகள் பகுதி மீது திருகோணமலையில் ஷெல் தாக்குதல்

திருகோணமலை,மே 12

திருகோணமலை மூதூர் கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் நேற்றிரவு கடும் ஷெல் தாக்குதலை நடத்தினர். இதில் ஏற்பட்ட சேத விவரங்கள் உடனடியாகத் தெரிய வரவில்லை.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் புலிகளின் நடமாட்டம் போர்நிறுத்த ஒப்பந்த மீறல்!

### கண்காணிப்புக் குழு திடீர் அறிக்கை

கொழும்பு, மே 12

"அண்மைய நாள்களாக இலங்கைக் கடற்படையினரை ஆத்திரமூட்டும் வகையில் கடலில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருப்பது போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்த மீறலாகும். இறுதியில் இப்போது எதிர்த் தாக்குதல் நடத்தி கடற்படைப் படகு ஒன்றை மூழ்கடித்துள்ளனர். அத்துடன், கண்காணிப்புக் குழுவினரையும் பெரும் அபாயத்திற்கு உட்படுத்தியுள்ளனர்."

- இவ்வாறு தெரிவித்துள்ளது கண்காணிப்புக்குழு.

கடற்படையினரின் டோறா படகு வடமராட்சி கடலில் தாக்கப்பட்டதையடுத்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடற்பிராந்தியம் இலங்கை அரசின் கட்டுப்பாட்டுப் பகுதி. சர்வதேசச் சட்டங்களுக்கு அமைய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் இதனை ஏற்றுக்கொண்டுள்ளார். அரச சார்பற்ற எவரும் கடல் பிராந்தியத்தையோ வான்வெளியையோ கட்டுப்படுத்த முடியாது. விடுதலைப் புலிகளுக்கு கடலில் எந்தவித உரிமையும் கிடையாது.

கடற்படையினரின் ரோந்துப் படகுகளில் கண்காணிப்புக் குழுவினர் இருக்கக்கூடாது - பங்கேற்கக்கூடாது - என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதை ஓர் அச்சுறுத்தலாகவே கண்காணிப்புக் குழு உணர்கின்றது. அதனைப் பாரதூரமான ஒன்றாகவும் கவனத்தில் எடுத்துக்கொள்கின்றது. போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சம பங்காளிகள் என்ற வகையில் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்புக்காகத் தம்மால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க

(8ஆம் பக்கம் பார்க்க)

## வலிந்து தாக்கியதால் பதிலடி கொடுத்தோம்!

### விடுதலைப் புலிகள் விளக்கம்

கிளிநொச்சி,மே12

வடமராட்சி கிழக்குக் கடலில் கடற்புலிகளின் படகுகள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் கடற்படையின் அதிவேக பீரங்கிப் படகுகள் வலிந்து தாக்குதலை மேற்கொண்டதையடுத்தே பதில் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தது.

நேற்றைய தாக்குதல் குறித்து நேற்று பின்னிரவு விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

"இத்தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இரு போராளிகள் விழுப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்று மாலை கிபிர் விமானக் குண்டுவீச்சு

கிளிநொச்சி,மே12

வன்னியில் மாங்குளம், ஒட்டிசுட்டான், இரணைமடு பகுதிகளில் கிபிர் விமானங்கள் நேற்று மாலை 6 மணியளவில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் நேற்று மாலை கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக அரசு இந்தத் தாக்குதலை மேற்கொண்டது.

கடல் சண்டையில் உதவிக்கு அழைக்கப்பட்ட கிபிர் விமானங்கள் தமது தளம் திரும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஹென்றிக்சன் இன்று கிளிநொச்சிக்கு அவசர பயணம்!

கிளிநொச்சி,மே 12

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை குறித்து ஆராய்வதற்காக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் இன்று அவசர பயணம் மேற்கொண்டு கிளிநொச்சி வருகின்றார்.

தரைவழியாக வரும் அவர் மாலை 4 மணிக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்கின்றார்.

அதன்பின் முக்கிய செய்தியாளர் மாநாட்டை தமிழ்ச்செல்வன் நடத்துவார். (ம)

### ஒருநாள் முடக்கத்தின் பின்னர்.......

## திருகோணமலையில் ஹர்த்தால் நடவடிக்கை வெசாக்கை முன்னிட்டு கைவிடப்பட்டது

### பௌத்த குருமாரின் கோரிக்கையை ஏற்றது பொங்கு தமிழ்ச் சமூகம்

திருகோணமலை, மே12

திருகோணமலையில் இன்றும் நாளையும் நடக்கவிருந்த ஹர்த்தால் 'வெசாக்' தினத்தை முன்னிட்டு கைவிடப்பட்டது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரச படைகள் மேற்கொண்டுவரும் பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கண்டித்து திருகோணமலையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தால் இன்றும் நாளையும் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படவிருந்தது. எனினும், 'வெசாக்' தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் ஹர்த்தாலைக் கைவிடும்படி பௌத்த மதத் தலைவர்கள் ஹர்த்தாலை

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தி.மு.க. கூட்டணி பெருவெற்றி முதல்வராகின்றார் கருணாநிதி!

## நீண்டகாலத்தின் பின் தமிழகத்தில் முதல் முறையாகக் கூட்டணி ஆட்சி

சென்னை, மே12

**நடந்துமுடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் செல்வி ஜெயராம் ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியை வீழ்த்தி, கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி பெரு வெற்றியீட்டியிருக்கிறது. அதனையடுத்து கலைஞர் முதல்வராகி ஆட்சிப்பீடம் ஏறுகின்றார்.**

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் நேற்று வாக்கு எண்ணிக்கையை அடுத்து அறிவிக்கப்பட்டன.

தமிழகத்தின் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி 172 தொகுதிகளையும், அ.தி.மு.க. கூட்டணி 60 தொகுதிகளையும் நடிகர் விஜயகாந்தின் தேசிய முற்போக்குத் திராவிடர் கழகம் ஒரு தொகுதியையும் கைப்பற்றின. சுயேச்சை வேட்பாளர் ஒருவரும் வெற்றிபெற்றார்.

தி.மு.க.கூட்டணியில் தி.மு.க. 103 தொகுதிகளையும், காங்கிரஸ் 35 தொகுதிகளையும், பாட்டாளி மக்கள் கட்சி 17 தொகுதிகளையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 8 தொகுதிகளையும், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி 9 தொகுதிகளையும் பெற்றன. அக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த முஸ்லிம் லீக் எந்தத் தொகுதியிலும் வெல்லவில்லை.

அ.தி.மு.க. கூட்டணியில் அ.தி.மு.க. 53, தொகுதிகளையும், ம.தி.மு.க. 5 தொகுதிகளையும், விடுதலைச் சிறுத்தைகள் இரண்டு தொகுதிகளையும் கைப்பற்றின. இந்தக் கூட்



டணியில் போட்டியிட்ட ஐ.என்.டி.யு.சி. (காளன்) போவேர்ட் புளொக் (சந்தானம்) ஆகிய கட்சிகள் தொகுதிகள் எதனையும் கைப்பற்றவில்லை. மறுபுறம் பாரதிய ஜனதாக் கூட்டணி மற்றும் போவேர்ட் புளொக் கட்சி என்பன ஒரு தொகுதியில் கூட வெற்றிபெறவில்லை.

**கூட்டணி ஆட்சி**

தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றிருந்தாலும் தனித்துப் பெரும்பான்மைப் பலத்தைப்பெற அக்கட்சியால் முடியாமற்போனது. இதனால், கூட்டணி ஆட்சியொன்றை அமைக்கவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் நேற்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த கருணாநிதி, கூட்டணி ஆட்சி அமைப்பது குறித்து பங்காளிப் கட்சிகளுடன் தாம் பேச்சு நடத்தப் போகிறார் என அறிவித்தார்.

தி.மு.க. பெரும்பான்மைப் பலம் பெறாமைக்கும், அ.தி.மு.க. பல இடங்களில் படுதோல்வியைத் தழுவியமைக்கும் இம்முறைத் தேர்தலில் நடிகர் விஜயகாந்தின் தேசிய முற்போக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரசன்னமே காரணமெனத் தமிழக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.


**வாழ்த்து**

தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தர்களான முன்னாள் பிரதமர் வாஜ்பாய், அத்வானி உட்படப் பல தலைவர்கள் தொலைபேசி மூலம் கலைஞர் கருணாநிதியுடன் தொடர்பு கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

புதிய முதல்வராகப் பதவியேற்பதற்கான அழைப்பை தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா இன்று அல்லது நாளை உத்தியோகபூர்வமாக விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்தல் பார்வை**

இந்தத் தேர்தலில் மொத்தம் உள்ள 4.63 கோடி வாக்காளர்களில் 3 கோடியே 27 லட்சம் பேர் வாக்களித்தனர். இது 70.22 சதவீத வாக்குப் பதிவாகும். வாக்குகள் எண்ணிக்கை நேற்றுக் காலை 8 மணிக்கு பலத்த பாதுகாப்புடன் தொடங்கியது. 60 நகரங்களிலுள்ள 82 மையங்களில் விறுவிறுப்பாக வாக்கு



எண்ணிக்கை நடைபெற்றது. 5 ஆயிரத்து 888 ஊழியர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டனர். 'சீல்' வைக்கப்பட்டிருந்த மின்னணு இயந்திரங்கள் சரியாக 8 மணிக்கு அனைத் துக் கட்சி வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. பிறகு ஒவ்வொரு மேசையிலும் ஒரேசமயத்தில் 14 இயந்திரங்கள் வைக்கப்பட்டு அவற்றில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் எத்தனை வாக்குகள் கிடைத்துள்ளன என்று எண்ணப்பட்



டன.

8.15 மணிக்கு 234 தொகுதிகளிலும் முன்னணியிலிருந்த வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். தொடக்கத்திலேயே தி.மு.க. வேட்பாளர்கள் பெரும்பாலான தொகுதிகளில் வெற்றிமுகத்துடன் இருந்தனர். சேப்பாக்கத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும், ஆண்டிப்பட்டித் தொகுதியில் ஜெயலலிதாவும் வெற்றிபெற்றனர். விருத்தாச்சலம் தொகுதியில் நடிகர் விஜயகாந்த் வெற்றிபெற்றார். முக்கிய தலைவர்களில் அன்பழகன், மு.க. ஸ்டாலின், ஜி.கே.மணி, ஆற்காடு வீராசாமி, பொன்முடி ஆகியோர் வெற்றிபெற்றனர். (ம-க)

## 5 ஆவது முறையாகவும் முதல்வராகும் கலைஞர்!



சென்னை, மே 12

தமிழகத்தில் நடந்து முடிந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து தமிழக முதலமைச்சராக மு.கருணாநிதி பதவி ஏற்கவுள்ளார்.

தமிழ்க வரலாற்றில் 4 தடவைகள் முதல்வராக இருந்தவர் என்கிற சாதனையை ஏற்கனவே 1996 - 2001 இல் அவர் நிகழ்த்தினார். தற்போது 5ஆவது முறையாக முதல்வர் பதவியை ஏற்பதன் மூலம் அந்தச் சாதனையைத் தாமே முறியடித்து, மீண்டும் புதிய சாதனையை கருணாநிதி நிகழ்த்தியுள்ளார். அதேபோல, தமிழகத்தில் அதிக காலம் முதல்வராக இருந்தவர் என்கிற சாதனையையும் இவர் புரிந்துள்ளார்.

1969 இல் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, முதல்முறையாக முதல்வர் பதவியை கருணாநிதி ஏற்றார். 1971 சட்டப் பேரவைத் தேர்தலில் வென்று, 2ஆவது முறையாக முதல்வர் ஆனார். 1976இல் நெருக்கடி நிலையின் போது அவரது ஆட்சியை மத்திய அரசு கலைத்தது.

அதன் பிறகு, 1977 தேர்தலில் வென்று முதல்வரான எம்.ஜி ஆர். 24.12.1987இல் தாம் காலமாகும் வரையில் தொடர்ந்து முதல்வராக இருந்தார். 1977, 1980, 1984 ஆகிய 3 தேர்தல்களில் தொடர்ந்து வென்று, 3முறை முதல்வராக அவர் இருந்தார். தொடர்ந்து 3 முறைமுதல்வராக இருந்தவர் என்கிற பெருமை எம்.ஜி.ஆர்க்கு மட்டுமே உண்டு.

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு 1989 தேர்தலில் வென்று 3 ஆவது முறையாக முதல்வர் ஆனார் கருணாநிதி.

சட்டசபைக் கலைப்பை அடுத்து 1991 தேர்தலில் தமது கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்விக்குப் பொறுப்பேற்று, துறைமுகம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் பதவியை ஏற்காமல் ராஜினாமாச் செய்தார் கலைஞர்.

1996 தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, 4ஆவது முறையாக முதல்வரானார் அவர். 2001 தேர்தலில் அ.தி.மு.க. வென்று ஆட்சிக்கு வந்தது.

1957 இல் தொடங்கி, தாம் போட்டியிட்ட தொகுதிகளில் எல்லாம் வென்றவர் என்கிற பெருமையும் கருணாநிதிக்கு உண்டு. தேர்த லில் தமது கட்சி அல்லது கூட்டணி தோல்வி அடைந்தாலும், தாம் போட்டியிட்ட தொகுதியில் அவர் வெற்றி பெற்றுவிடுவார்.

1984 - 86 மேலவை உறுப்பினராக இருந்த போது 1984இல் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் மட்டும் கருணாநிதி போட்டியிடவில்லை. இதர அனைத்துத் தேர்தல்களிலும் அவர் போட்டியிட்டு வென்றுள்ளார்.

இதுவரை கருணாநிதி வென்ற தொகுதி கள் (ஆண்டு வாரியாக) வருமாறு:-

✱ குளித்தலை - 1957 - 62, ✱ தஞ்சாவூர் 1962 - 67, ✱ சைதாப்பேட்டை 1967 - 71, மற்றும் 1971 - 76, ✱ அண்ணாநகர் 1977 - 80 மற்றும் 1980 - 83, ✱ துறைமுகம் 1989 - 91 மற்றும் 1991, ✱ சேப்பாக்கம் 1996 - 2001 மற்றும் 2001 - 2006, அத்தோடு 2006 - 2011.

தமிழகத்தின் புதிய முதல்வர் கோட்டை யில் பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. (ம-க)

## படையினர் சூட்டு வயோதிபர் பலி!

### சட்டநாதர் சிவன்கோயிலடியில் சம்பவம்

யாழ். சட்டநாதர் கோவில் முன்பாக படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலல் வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாகப் பலியானார். இராணுவத்தினரை நோக்கி கிரனேட் வீசப்பட்டதை அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை வீதியில், சட்டநாதர் ஆலயப் பகுதியில் வழமைபோன்று படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். நண்பகல் 12.30 மணியளவில் அவர்களை இலக்குவைத்து இனந்தெரியாதவர்களால் கிரனேட் வீசப்பட்டதாகக் கூறப்பட்டது. அது வெடித்ததில் சமர என்ற சிப்பாய் காயமடைந்தார் என்று பொலீஸார் கூறினர். அவர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டார்.

இதனையடுத்து மற்றைய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும், அதில் இந்த வயோதிபர் உயிரிழந்தார் என்றும் நீதிவான் விசாரணையின்போது பொலீஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்தில் நல்லூர் மூத்தவிநாயகர் ஒழுங்கையைச் சேர்ந்த முத்துவேல் காளிதாஸ் (வயது 75) என்பவர் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். அவரது சடலம் காணப்பட்ட இடத்தில் யாழ். பதில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-15-86)

### படையினர் மீது ஊரிக்காட்டில் துப்பாக்கிச்சூடு!

வல்வெட்டித்துறை, ஊரிக்காடு பகுதியில் நேற்று நண்பகல் சைக்கிள்களில் ரோந்து சென்ற படையினர் மீது இனந்தெரியாதவர்கள் கிரனேட் வீசினர். இதில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் பலாலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (த-70-15)

## 'குமுதினி' படகுப் படுகொலைகளின் 21ஆவது ஆண்டு நினைவு நாள்

நல்லூர்,மே12

'குமுதினி' படகுப் படுகொலைகளின் 21ஆவது ஆண்டு நிறைவு நாளை எதிர்வரும் திங்கட்கிழமை நெடுந்தீவில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பதென நெடுந்தீவு மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அன்றையதினம் காலை 7மணிக்கு அஞ்சலி நிகழ்வு நெடுந்தீவு துறைமுகத்தில் அமைந்துள்ள நினைவுத் தூபியருகே இடம்பெறும். இதில் படுகொலையுண்டவர்களுக்கு பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்துவார்கள். இங்கு இடம்பெறும் நினைவுத் திருப்பலிப் பூசைகளை நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு. அருள்நேசன் அடிகளார் ஒப்புக்கொடுப்பார்.

அதைத்தொடர்ந்து காலை 9 மணிக்கு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை தேவாலயத்திலும் நண்பகல் 12 மணிக்கு நெடுந்தீவு மேற்கு நெழுபினி விநாயகர் ஆலயத்திலும் விசேட ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளன.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவில் இருந்து குமுதினி படகு மூலம் குறிகாட்டுவான் நோக்கிச் சென்ற அப்பாவி மக்கள் 30 பேர் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.(111)

## வெறிச்சோடியது வேலணை!

வேலணை,மே12

வேலணைப் பகுதியில் உள்ள கடைகள் யாவும் நேற்று மூடப்பட்டதால் அப்பகுதி நேற்றுக் ஹர்த்தால் போலக் காட்சியளித்தது.

'தமிழ் மக்கள் படை' என்ற பெயரில் வேலணைப்பகுதியில் உள்ள கடைகளில் நேற்றுக்காலை அநாமதேயச் சுவரொட்டி ஒன்று ஒட்டப்பட்டிருந்தது. நேற்று முதல் மூன்று தினங்கள் கடைகளைப் பூட்டுமாறு அந்தச் சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து வர்த்தகர்கள் அனைவரும் தமது கடைகளைப் பூட்டிவிட்டு வீடுகளுக்குத் திரும்பினார்கள். இதனால் அப்பகுதி ஹர்த்தால் போலக் காட்சியளித்தது. (ம-167)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுப் போக்கு தொடர்ந்தும் தமிழகத்தில் நீடிக்கும்

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்கு தமிழக மக்கள் தீர்ப்பு வழங்கி விட்டார்கள்.

இதுவரை, முதலமைச்சர் பதவியில் இருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி செல்வி ஜெயலலிதா தமிழக சட்டமன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையில் அமரப்போகின்றார்.

இதுவரை சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு சட்ட சபைக்குள் பிரசன்னம் கொடுக்காமலேயே தமது எம்.எல்.ஏ. பதவியை தக்கவைத்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி முதல்வராவது பெரும்பாலும் உறுதியாகி விட்டது. எனவே, இனிமேல் சட்டமன்றத்துக்கு அவர் ஒழுங்காகப் பிரசன்னம் தருவார், சட்டமன்றக் கடமைகளில் ஈடுபடுவார் என உறுதியாக எதிர்பார்க்கலாம்.

இம்முறை ஆட்சி மாற்றம் முக்கிய திருப்புமுனை ஒன்றுடன் வந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

கடந்த சுமார் நாற்பது ஆண்டு காலமாக தமிழகம் இரண்டு பெரிய திராவிடக் கட்சிகளினதும் கோட்டையாகத் தொடர்ந்து விளங்கி வந்திருக்கின்றது. தி.மு.க.வோ அல்லது அ.தி.மு.க.வோ ஏதோ ஒரு திராவிடக் கட்சிதான் கடந்த நான்கு தசாப்த காலமாக தமிழக மாநில ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டிருந்து வந்துள்ளது. ஆட்சி கைமாறினாலும் அது, இந்தக் கட்சிகள் இரண்டில் ஒன்றிடமிருந்து மற்றதற்குத்தான். இம்முறையும் கூட அப்படித்தான். அ.தி.மு.கவிடமிருந்து தி.மு.கவுக்கு ஆட்சியதிகாரம் மாறுகிறது.

ஆனால், ஒரு முக்கிய - பிரதான - வித்தியாசம் இம்முறை உள்ளது. இதுவரை காலமும் - கடந்த நாற்பது ஆண்டுகளாக - ஏதோ ஒரு திராவிடக் கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து வந்துள்ளது. எனினும், இம்முறை திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ள போதும், அக்கூட்டணியின் பிரதான கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. ஆட்சிை பத் தக்கவைத்து நீடிப்பதற்கு தனது கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுகளிலும், ஒத்துழைப்பிலும் தங்கியிருக்க வேண்டிய இக்கட்டு தி.மு.கவுக்கு.

புதுடில்லியில் - மத்தியில் - ஆட்சி அமைத்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் குடுமி தி.மு.க. போன்ற கூட்டணிக் கட்சிகளின் கைகளில் என்றால், அது போலவே, மாநிலத்தில் - தமிழகத்தில் - ஆட்சி அமைக்கப் போகின்ற தி.மு.கவின் ஆட்சிக் குடுமியும் அதன் கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி போன்றவற்றின் கைகளில்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த ஆட்சி மாற்றம் ஈழத் தமிழரின் இனப்பிரச்சினை விடயத்தில் எத்தகைய தாக்கத்தை - பிரதிபலிப்புகளை - ஏற்படுத்தும் என்பதை இவ்வாறு தனித்துப் பெரும்பான்மையை எக்கட்சியும் பெறாத நிலையில் - கூட்டணிக் கட்சியின் தயவில் தங்கி நிற்கும் கூட்டமைப்பின் பிரதான கட்சிகளிடம் - மத்திய, மாநில அரசுகளின் அதிகாரம் சென்றிருக்கும் நிலைமையின் ஊடாகவே நாம் நோக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் 'கிணற்றில் போட்ட கல்லாக' தேக்கமடைந்திருக்கும் இன்றைய சூழலில் -

அந்த முயற்சிகளை முன்நகர்த்துவதில் அனுசரணைத் தரப்பான நோர்வேயின் பங்கு பயனேதும் தராமல் சிக்கலடைந்திருக்கும் இந்த நிலையில் -

இப்பிராந்தியத்தின் வல்லாதிக்க நாடான இந்தியாவின் ஆக்கபூர்வமான பங்களிப்பு ஏதேனும் அமைதி முயற்சிகளின் அசைவுக்கு வழி சமைக்காதா என்ற ஆர்வமும் தேடுதலும் சர்வதேச சமூகத்தின் கருத்தில் எழுந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் -

அயலக மாநிலமான தமிழ்நாட்டில் இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பது முக்கிய விடயமாகின்றது.

ஈழத் தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் அடக்கி, ஒடுக்கி, அழிப்பதற்காக இந்தியாவுடன் பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தம், இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் தேர்ந்த இராணுவப் பயிற்சி போன்ற தனக்குச் சார்பான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தென்னிலங்கை சிங்கள அரசுத் தரப்பு ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கும் முக்கியமான காலகட்டத்தில் தமிழகத்தில் இந்த ஆட்சி மாற்றம் நேர்ந்திருக்கின்றது.

மத்திய அரசில் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து, 13 அமைச்சுப் பொறுப்புக்களைத் தம் வசம் வைத்தபடி, ஈழத் தமிழர் விவகாரத்தில் மத்திய அரசு வழி தவறி நடந்து விடாமல் இதுவரை பார்த்துக் கொண்ட தமிழ்நாட்டின் கூட்டணிக் கட்சிகளே இப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்பதால் அதே பொறுப்புணர்வோடு - ஈழத் தமிழரின் நலனுக்குக் குந்தகமாக இந்திய மத்திய மற்றும் தமிழக மாநில அரசுகள் நடந்து கொள்ளாமல் - தொடர்ந்தும் பார்த்துக்கொள்ளும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

# தமிழரை அழிக்கும் அரசின் செயலை நிறுத்த சர்வதேச அழுத்தம் அவசியம்

## விக்கியின் நிழல்கள் கோரிக்கை

"யுத்தம் இடம் பெற்ற காலத்திலும் சரி, யுத்தநிறுத்தம் இடம்பெற்ற காலத்திலும் சரி தொடர்ந்து இன்னலுற்று அகதி முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும், சுடுகாடுகளிலும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தமிழ் மக்களுக்கே ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு தெரிவிக்கும் அறிக்கையொன்றை திருமலை மாவட்டத்திலுள்ள விக்கியின் நிழல்கள் அமைப்பின் ஆய்வாளர் வா.இளங்குமரன் அனுப்பியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது திருகோணமலையில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் அப்பாவித் தமிழ் மக்கள் மீது குண்டுத் தாக்குதல்கள், சுற்றிவளைப்புத் தேடுதல்கள், கைதுகள் என இன அழிப்பு சிறப்பாக இடம் பெற்று வருகிறது. இங்கு கைதுசெய்யப்பட்டு கொலை செய்யப்படுபவர்கள் எந்த விதமான பயங்கரவாதச் செயலிலும் ஈடுபடாதவர்கள். ஆனால், இவர்களைக் கைதுசெய்யும் படையினர் இவர்களைத் தாக்கி பயங்கரவாதி என கூற வைக்கின்றனர்.

கப்பல்துறையில் அண்மையில் ஒரு குண்டைப் படையினரே வைத்துவிட்டு தமிழ்ப் பொதுமகன் ஒருவரை அக்குண்டை எடுக்கும்படி கூறி, அதனை வீடியோ படம் எடுத்த சம்பவமும் - கன்னியாவில் துப்பாக்கியால் தமிழர் ஒருவரை சுட்டுவிட்டு அவர் சடலத்திற்கு அருகில் குண்டு ஒன்றை வைத்து விட்டு அவரை விடுதலைப்புலி என முத்திரை குத்திய சம்பவமும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சம்பவங்களைச் சோடித்து படையினர் நமது பாதுகாப்பை பலப்படுத்திக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலையில் கடந்த 02.01.2006 ஐந்து மாணவர்கள் படுகொலை, மாமனிதர் விக்கி படுகொலை, 12.04.2006 இனவன்முறை போன்றன ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முன்னிலையிலேயே இடம்பெற்றன. இதில் ஈடுபட்டவர்கள் சிங்கள இராணுவத்தினரும் அவர்களது கைக்கூலிகளும் என்பதை அனைவரும் நன்கு அறிவர். இதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரில் எவரையும் காவல்துறையினர் இதுவரை கைதுசெய்யவில்லை.

இத்தகைய சம்பவங்களினால் தமிழ் மக்கள் அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களை சோதனை என்ற பெயரிலும், சந்தேகம் என்ற பெயரிலும் ஸ்ரீலங்கா படையினர் கைதுசெய்து வருகின்றனர். எந்தவொரு நியாயமற்ற நிலையிலும் தமிழர்கள் தொடர்ந்து அவதியுற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மூதூரில் இடம்பெற்ற குண்டுவீச்சுத் தாக்குதலில் பல அப்பாவிச் சிறார்கள் கொல்லப்பட்டதுடன் பலர் அங்கவீனர்களாக்கப்பட்டும் உள்ளனர். இவ்வாறான இன அழிப்புத் தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாக்கவே சிறார்கள் விடுதலைப் புலிகளுடன் இணைவதற்கு முன்வருகின்றனர். ஆனால், அவர்களை விடுதலைப் புலிகள் வலுக்கட்டாயமாக சேர்ப்பதாக அரசு பிரசாரம் செய்கிறது.

இலங்கை அரசு தொடர்ந்தும் ஒரு சம்பவம் நடந்தவுடன் அதனை விசாரணை செய்ய உத்தரவிட்டுள்ளதாக அறிக்கை விடுமே தவிர, அவ்வாறான சம்பவத்தை தடுத்து நிறுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது என்பதே உண்மை.

எனவே, சர்வதேச சமூகமே தமிழ் மக்களை அழிக்கும் இந்த நாசகாரச் செயலை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசை அறிவுறுத்துங்கள். இல்லையேல் தமிழர்களின் அழிவை தடுத்து நிறுத்த ஒரே வழி யுத்தம் தானா என எண்ண வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# அலுவலகங்களில் பணி நேரம் மாற்றம்; மீள்பரிசீலனை அறிக்கை விரைவில்

நல்லூர்,மே12

நாட்டில் பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் பணி நேரத்தை மீள் பரிசீலனை செய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் 14ஆம்திகதி நள்ளிரவு முதல் நாட்டில் கடிகாரம் பின்நகர்த்தப்பட்டு நேரம் அரை மணித்தியாலத்தால் முன்நகர்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அலுவலக ஊழியர்கள், ஆசிரியர்கள், மணவர்கள், வங்கிப் பணியாளர்கள் ஆகியோர் உட்பட பொதுமக்கள் தங்கள் அன்றாட அலுவல்களை நிறைவேற்றுவதில் நேரக் குழப்பமடைந்தனர்.

இந்த நிலையை சீர்ப்படுத்தும் நடவடிக்கையாக பணி நேரமாற்றம் குறித்து ஆராய குழு ஒன்றை அரசு நியமித்தது:

இக்குழு கல்வி, போக்குவரத்து, இடர்காப்பு, முகாமைத்துவம், அரசநிர்வாகம் ஆகிய அமைப்புகளிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் இது தொடர்பான கருத்துகளைப் பெற்றுக்கொண்டது.

இதன் பிரகாரம் அலுவலக நேரத்தை காலை 8.30 மணி தொடக்கம் பி.பகல் 4.30மணி வரைக்கும், பாடசாலை நேரத்தை காலை 7.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரைக்கும் மாற்றுவதென இக்குழு யோசனை கூறியுள்ளதாக அறியமுடிகின்றது.

இதற்கமைவாக ரயில்வே நேர அட்டவணையிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிகின்றது. தனியார்துறை அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றின் பணி நேரமாற்றம் குறித்த சாத்தியங்களை தொழில் அமைச்சும் தொழில் திணைக்களங்களும் தீர்மானிக்கவேண்டும் எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். (111)

## வேலணையில் கைதானோரில் ஒருவர் தடுத்துவைப்பு

வேலணை,மே12

வேலணை வங்களாவடிச்சந்திக்குச் சமீபமாக நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலையடுத்துக் கைதான ஐவரில் நால்வர் விடுவிக்கப்பட்டனர். ஒருவர் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

முன்னாள் கிராமசேவையாரும் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தமிழரசுக்கட்சி வேட்பாளருமான சு.பாலச்சந்திரன்(வயது 62) என்பவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

கைதான ஏனைய இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவே அவர்களது வீட்டில் கொண்டுவந்துவிடப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (167)

## விஞ்ஞான கற்கை நெறி

தேசிய பொறியியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கென தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கட்டுநாயக்கா எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனம் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்கள் மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க லாம். விண்ணப்பப்படிவங்களை நிறுவனத்திலோ அல்லது இல 07 கோயில் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய பயிலுநனர் கைத்தொழில் அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

## முனீஸ்வரன் வீதி வீடொன்றில் 2 கிலோ கஞ்சா பிடிபட்டது

யாழ்.நகரப் பகுதியில் முனீஸ்வரன் வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 2 கிலோ 200 கிராம் கஞ்சாவை யாழ். பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து குறிப்பிட்ட வீட்டைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய பொலீஸார் கஞ்சாவைக் கைப்பற்றினர்.

குறிப்பிட்ட வீட்டில் இருந்தவர் என்று கூறப்படும் பாலசிங்கம் புஸ்பகுமார் (வயது 25) என்ற இளைஞரை பொலீஸார் கைதுசெய்தனர் அவரை நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்றுப் பொலீஸார் ஆஜர்செய்தனர்.

பிரஸ்தாப இளைஞரை எதிர்வரும் 23ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும்-

கைப்பற்றப்பட்ட கஞ்சாவை நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கும் படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

## உதயவாக்கு

அச்சத்தை அகற்றுவதே மனிதனின் முதற் கடமை. -

## நாளை

சித்திரை : 30
சனிக்கிழமை
13.05.2006
திதி : பூரணை
பிற்பகல் : 12.34
நட்சத்திரம் : விசாகம்
முன்னிரவு : 9.40
சுபநேரம் : 02.54 - 04.24
ராகுகாலம் : 08.54 - 10.24

# இராணுவத்துடன் இணைந்து கருணா குழுவே தாக்குகிறது

## ஈழ அகதிகள் தமிழகத்தில் தெரிவிப்பு

ராமேஸ்வரம்,மே.12

இலங்கை இராணுவத்தினரின் ஆதரவுடன் சிங்களவர்களும், கருணா குழுவினரும் தமி ்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர் என இலங்கையிலிருந்து அகதிகளாகச் சென்றவர்கள் ராமேஸ்வரத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கையின் திருகோணமலை, மூதூரைச் சேர்ந்த 9 குழந்தைகள் உட்பட 21 பேர் படகுகள் மூலம் நேற்று ராமேஸ்வரம் வந்தன. நேற்றுமுன்தினம் பேசாலை கடற்கரையிலிருந்து புறப்பட்ட இவர்கள் நேற்று அதிகாலை ஐந்து மணிக்குத் தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்கரையில் வந்திறங்கினர்.

இரண்டு குழந்தைகளின் தந்தையான மாலா (வயது 24) கூறியதாவது:-

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இலங்கை இராணுத்தின் ஆதரவுடன் சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்குகின்றனர். கருணா ஆதரவாளர்களும் இராணுவத்தினருடன் இணைந்து தாக்குகின்றனர். இதனால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றனர். லட்சக்கணக்கான ரூபா மதிப்படைய பொருள்கள் அழிக்கப்பட்டுள்ளன. பெண்கள் வீடுகளில் பாதுகாப்பாக இருக்க முடியவில்லை.

இருதயபுரம், மல்லிகைத் தீவு, மணற்சேனை போன்ற இடங்களிலிருந்தவர்கள் பகலில் வீட்டிலும், இரவில் காட்டிலும் நாடோடி வாழ்க்கை வாழ்கின்றனர். நாங்கள் உயிருடன் இருப்போம் என்ற நம்பிக்கை இல்லாததால் இங்கு அகதிகளாக வந்தோம் இவ்வாறு கூறினார். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்தில் 21 பேர் காயம்

கொழும்பு,மே12

நேற்றுமுன்தினம் புத்தளம் நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் 21 பேர் காயமடைந்து புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மினிபஸ் ஒன்றும் மண் ஏற்றிச் சென்ற கென்டர் வாகனமொனறும் தில்லையடி என்னுமிடத்தில் காலை 8.30 மணியளவில் மோதிக் கொண்டதையடுத்து இவ்விபத்து ஏற்பட்டது. மினிபஸ் ஓட்டோவொன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது இவ்விபத்து ஏற்பட்டது.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க-256)

# போதைப்பாக்குக் கடத்தல் முறியடிப்பு

தமிழகத்திலிருந்த கடத்திவரப்பட்ட 3 லட்சத்து 6 ஆயிரம் போதைப்பாக்கு (பான் பராக்) பொதிகளைக் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்களன்று சென்னையிலிருந்து இலங்கை வந்த விமானத்தில் வந்திறங்கிய இரு பெண்களிடமிருந்தே இவை கைப்பற் றப்பட்டன எனவும், இதன் பெறுமதி 18 லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


# மனிதவள் மேம்பாட்டுப் பகுதி
## நிதித்துறை
## கணக்கியற் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து கணக்கியற் பயிற்சிநெறிக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*தகைமைகள் :*

01) கல்வித் தகைமை :
க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் தேர்ச்சியடைந்திருந்தல் வேண்டும்.

02) அகவை - 16 தொடக்கம் 21 வரை
குறிப்பு :
01) வேண்டுகை முடிவு நாள் - 20.05.2006
02) நேர்காணல் நடைபெறும் நாள் - 24.05.2006 காலை 9 மணி

03) நேர்காணல் நடைபெறும் இடம் -
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

04) நேர்காணலுக்கு வருகை தருவோர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வரவேண்டும்.

05) பயிற்சிக் காலத்தில் தங்குமிட வசதி உண்டு.
* மாதந்தோறும் ரூபா ஐயாயிரம் (5000) உதவு தொகையாக வழங்கப்படும்.
* உணவு வழங்கப்படும். உணவுச்செலவு உதவு தொகையிலிருந்து கழிக்கப்படும்.

06) வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

07 பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்

ஆளுகை
மனிதவள மேம்பாட்டு பகுதி,
நிதித்துறை.

(சி/49229)


# சபிண்டீகரண அழைப்பிதழ்

அமரர்
## ஏகாம்பரநாதன் சிவபாக்கியம்
(ஆவரங்கால்,புத்தூர்)



தோற்றம் : 06.11.1915

மறைவு : 13.04.2006

*திதி : பங்குனிமாதப் பூரணை*

*எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் பங்குகொண்டும்,தொலைபேசி மற்றும் ஊடகங்கள் வாயிலாக ஆறுதல் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*மேலும் அமரரின் சபிண்டீகரணம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (14.05.2006) காலை 10 மணி முதல் எமது இல்லத்தில் இடம்பெறும். தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலைகள் காரணமாக அழைப்பிதழ்களை நேரில் கையளிக்க இயலாதுள்ளது. எனவே இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அமரரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனைகளில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் இடம்பெறும் மதிபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர். T.P. : 4591660

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

# நான்காண்டின் இதயம் சுமக்கும் நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 25 |
| 05 | 04 |
| 1927 | 2002 |



## திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா

*திதி: சதுர்த்தசி 2006.05.12 (வெள்ளிக்கிழமை)*

எங்கள் தெய்வமே!
அன்பின் திருவுருவாய்
அறிவின் ஒளிவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய்
இல்லத்துக் கரசியாய்
கணவருக்கு நல் துணைவியாய்
பன்னிரு செல்வங்களுக்கு அன்னையாய்
விளங்கிய அம்மாவே!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாதம்மா உம் துயரம்.

*குறிப்பு: இன்று (12.05.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*முகவரி: வேலுப்பிள்ளை,*
*'செல்வவாசா'*
*வண்ணாங்கேணி தெற்கு,*
*பளை.*

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

(சி-49248)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 | 04 |
| - | - |
| 10 | 05 |
| - | - |
| 1929 | 2004 |



## ஐயாத்துரை இரத்தினசிங்கம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

*திதி 12-05-2006*

இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
அப்பா உங்கள் பிரிவை மறக்கமுடியாது
தினமும் மனக்கண்முன் நின்று
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

*'அன்பு இல்லம்'*
*ஓடை ஒழுங்கை, சவனாய்*
*புலோலி வடக்கு,*
*பருத்தித்துறை.*

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-49250)

# மரண அறிவித்தல்

## திருமதி சீனிவாசகம் அளகம்மா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீனிவாசகம் அளகம்மா அவர்கள் நேற்று (11.05.2006) வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணபதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான சீனிவாசகத்தின் அன்பு மனைவியும் அருளம்மா, மனோன்மணி, நாகராசா, குமாரசாமி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் வல்லிபுரம், தணிகாசலம், ஜெயம், வசந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் மதிப்புக்குரிய மாமியும் உதயா, சேகர்(ஜேர்மனி), சுகந்தன், தர்சனா, சாந்தினி, சிவராசா(சுவிஸ்),சாந்தன்,ரதி-சோமக்கினி, வதனி-சிறீ, சுதா-ராகினி(சுவிஸ்),ரஜனி-ரகுபதி(சுவிஸ்),சிறீ-ஜசோ, தர்சன், ஜசிந்தன், தனுசா-உசன்-துபீட்சன்(பிரான்ஸ்)ஆகியோரின் செல்லப்பேர்த்தியும் காலஞ்சென்ற செல்லம்மா,காலஞ்சென்ற நல்லம்மா (மலேசியா), காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற சின்னம்மா,கந்தசாமி,தங்கரத்தினம்(மலேசியா)ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (12.05.2006) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில். (50170)

*தகவல்*
சீ.நாகராசா(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இந்து, சண்டிலிப்பாய் இந்து, யூனியன் வலைபந்தாட்டத்தில் மாவட்டச் சம்பியன்கள்

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளிடையே இடம்பெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் 15,17,19 வயதுப் பிரிவுகளில் முறையே வட இந்து மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியன சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

திருநெல்வேலி முத்துத் தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

15 வயதுப் பிரிவில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆட்ட முடிவில் வட இந்துமகளிர் கல்லூரி வெற்றிபெற்றுச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

17 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் இறுதிப் போட்டியில் மோதிக் கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாகவும் இறுதிவரை வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க முடியாததாகவும் இப்போட்டி அமைந்து இருந்தது.

ஆட்ட முடிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 24:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

19 வயதுப் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஆட்டம் எதிர்பார்த்த அளவுக்கு சோபிக்கவில்லை. ஆட்ட முடிவில் யூனியன் கல்லூரி 52:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் இந்து மகளிர் கல்லூரியை வெற்றிகொண்டு சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

மாகாண மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும் பெற்ற பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (86)

# உள்ளக விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.வை.எம்.சி.ஏ. தனது அங்கத்தவர்களுக்கு இடையில் உள்ளக விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்க விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்தினை அலுவலகத்தில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ். வை.எம். சி.ஏ.செயலாளர் ஜெயராஜசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (190)

# கலாபூஷணம் விருதுபெறும் கலைஞர்களின் விவரம்

2005 -2006ஆம் ஆண்டுகளுக்கான கலா பூஷண விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பு - 7 ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டி சில்வா மண்டபத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. எனத் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மஹிந்த யாப்பா பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ள இந்நிகழ்வில் விருதுபெறவுள்ள கலைஞர்கள் விவரம் பின்வருமாறு.

வைரமுத்து உருத்திரன்- (யாழ்ப்பாணம்) கர்நாடக சங்கீதம், கணபதிப்பிள்ளை சிவகாருண்யம் (யாழ்ப்பாணம்) நாடகம், அகஸ்ரின் வேதானந்தன் (யாழ்ப்பாணம்) சிற்பம், சரவணமுத்து துரைவீரசிங்கம் (யாழ்ப்பாணம்) சிற்பம், சித்திரம், கோதண்டபாணி கானமூர்த்தி (யாழ்ப்பாணம்) நாதஸ்வரம், சீனிவாசகம் செந்துரராசா (யாழ்ப்பாணம்) சிற்பம், அன்ரனி பாலதாஸ் (யாழ்ப்பாணம்) நாட்டுக்கூத்து, சின்னத்தம்பி வேல்முருகு (மட்டக்களப்பு) இலக்கியம், ஐயம்பிள்ளை சிவானந்தராசா (மட்டக்களப்பு) சாகசச் செயல்கள், நடனம், ஒப்பனை ஓவியம், சிற்பம், நாகண்டாப்போடி குமாரவேல் (மட்டக்களப்பு) ஓவியம், வயிரமுத்து ஞானமர்ணிக்கம் (அம்பாறை) நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு -

நாகமணி விநாயகமூர்த்தி (அம்பாறை) நாட்டுக்கூத்து, கோணமலை சண்முகராசா (திருகோணமலை) மிருதங்கம், ஆசீர்வாதம் சிங்கராஜா (திருகோணமலை) நாடகத்துறை, பரமுகந்தையா சிதம்பரப்பிள்ளை (வவுனியா) கவிதை ஆக்கம், நாடகம், மார்க்கண்டு சிவஞானம் (வவுனியா) சிற்பம், பொன்னையா பஞ்சாட்சரசிவம் (கிளிநொச்சி) நாட்டுக்கூத்து, மேடைநாடகம், நுண்கலை, பாட்டு, சூசை சந்தியா (கிளிநொச்சி) நாட்டுக்கூத்து, கார்த்திகேசு ராஜேந்திரன் (முல்லைத்தீவு) நாட்டுக்கூத்து, ஆறுமுகம் சுப்பிரமணியம் (முல்லைத்தீவு) நாட்டுக்கூத்து, புராணநாடகம், சமூக நாடகம், கே.பி.சிவம் (கண்டி) இலக்கியம், நாடகம், ஆய்வுத்துறை, பத்திரிகை, தேவதாஸ் ஜெயசிங் (கண்டி) இலக்கியம், நாடகம், ஆய்வுத்துறை, பத்திரிகை, இராசா ஜேகசோதி (கொழும்பு) கர்நாட இசை நாடகம், அண்ணாவி மரபு -

சிவபாக்கியம். தில்லைநாதன் (கொழும்பு) ஊடகத்துறை, சின்னத்தம்பி ஆறுமுகம் அழகேசன் (கொழும்பு) நாடகம், சின்னவன் நாகராசா (கொழும்பு) கர்நாடக சங்கீதம், சின்னையாகுமார்(மல்லிகை சி.குமார்) (நுவரெலியா) கலை இலக்கியம், சிறுகதை, தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் (கம்பஹா) இலக்கியம், நாடகம், புறோனிஸ் பெனடிக்ற் மிரன்டா (புத்தளம்) நாடகம், வைத்தீஸ்வரன் சிவசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்) ஓவியம், சிற்பம், வல்லிபுரம் கந்தையா (யாழ்ப்பாணம்) சிற்பம், தம்பியப்பா அழகையா (அம்பாறை) நாட்டுக்கூத்து, அந்தோனி சிமான் (மன்னார்) நாட்டுக்கூத்து, நாடகம், திருமதி நவமணி பத்மநாதன் (கொழும்பு) சங்கீதம், சின்னவிப்போடி பாலகப்போடி (மட்டக்களப்பு) நாட்டுக்கூத்து, ஆறுமுகம் தங்கத்துரை (மட்டக்களப்பு) சிறுகதை, நாவல், நாடகம், செல்வராசா விவுணசேகரம் (திருகோணமலை) நாட்டுக்கூத்து, சின்னத்தம்பி இரத்தினம் (கிளிநொச்சி) நாடகத்துறை, மாணிக்கம் ரூபமூர்த்தி (முல்லைத்தீவு) நாடகம், இசை, ஓவியம், செல்வி. மாதுசிரோன்மணி வேலாயுதம் (யாழ்ப்பாணம்) இசைத்துறை.

# சதுரங்கச் சுற்றுப்போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசளிப்பு

மெற்றோ பொலிற்றன் மற்றும் நவகலா நிறுவனங்களின் ஆரவுடன் தமிழ் செய்தி தகவல் மையம் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கிடையில் 10, 12, 15,19 வயதிற்குக் கீழ் என்ற அடிப்படையில் நான்கு பிரிவுகளாகநடத்திய மாபெரும் சதுரங்க சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு வைபவம் கடந்த வாரம் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக மெற்றொ பொலிற்றன் நிறுவன பிரதேச முகாமையாளர் திஸ்ஸ வீரசிங்க கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி உரையும் ஆற்றி வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

இவ்வைபவத்தில் மெற்றோபொலிற்றன் யாழ். வதிவிட பிரதிநிதி சிறீகரன், நவகல உரிமையாளர் க.நகுலேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு தமிழ் செய்தி தகவல் மைய போஷகர்களான சிவமகாராசா, கணநாதன் மற்றும் பேராசிரியர்கள் சண்முகலிங்கன், சிவநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நான்கு பிரிவுகளிலும் வெற்றிபெற்ற முதல் 10 பேர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்தோடு ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கமும் இரண்டாமிடம் பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் சிறந்த மாணவியர்க்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

கூட்டத்தில் சதுரங்க தேசிய மட்ட வீரர் ஆதவன் மற்றும் கணநாதன், சண்முகலிங்கம், சிவநாதன் ஆகியோர் உரை ஆற்றினர்.

தலைமையுரை, வரவேற்புரை, நன்றியுரை ஆகியவற்றை புத்திரன் நிகழ்த்தனார். மங்கல விளக்கினை பிரதம விருந்தினருடன் சிறீகரன், சிவமகாராசா, சிவநாதன், சண்முகலிங்கன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

பரிசில்களை பிரதம விருந்தினருடன் சீறீதரன்,கணநாதன், சிவநாதன், சண்முகலிங்கன் ஆகியோரும் வழங்கினர்.

சதுரங்க போட்டி மற்றும் பரிசளிப்பு வைபவம் ஆகியவற்றிற்கான முழு ஏற்பாடுகளையும் தமிழ் செய்தி தகவல் மைய இணைப்பாளர் ஜே.பாரதி மேற்கொண்டிருந்தார்.





பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மெற்றோ பொலிற்றன் நிறுவன பிரதேச முகாமையாளர் திஸ்ஸ வீரசிங்க வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் வெற்றி பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# ஜெனீவா பேச்சுக்கு சாதகமான சூழலை உருவாக்க அரசு அனைத்து முயற்சிகளையும் செய்கின்றது

கொழும்பு,மே12

ஜெனீவா பேச்சை மீளத் தொடங்குவதற்கான சாதகமான சூழலை உருவாக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

கடந்த செவ்வாய்கிழமை மாவை சேனாதிராஜா எம்.பி. அரசை விமர்சித்து நாடாளுமன்றில் உரையாற்றினார். இதற்குப் பதிலாகவே நிமால் சிறிபால டி சில்வா அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவரது உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. மிகுதி இங்கு பிரசுரமாகிறது.

அதேபோல், கோமரசன்கடவையில் வயலில் வேலைசெய்துகொண்டிருந்த சிங்கள விவசாயிகள் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர். இவ்வாறு புலிகள் இனக்கலவரத்தைத் தூண்டமுற்பட்டனர்.

உண்மையில் பாதுகாப்புப் படையினர் நேர்மையாகச் செயற்பட்டதன் மூலம் இன வன்முறைகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். ஏனைய பகுதிகளுக்கும் இது பரவ அவர்கள் அனுமதிக்கவில்லை.

புலிகள் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும், அரசு பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் எல்லாவகையான வன்முறைகளையும் கண்டிக்கிறது.

இராணுவத்தளபதி மீதான தாக்குதலையடுத்து ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டுமக்களுக்கு உரையாற்றியபோது, அவர் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக விழிப்புணர்வை விசேடமாக வெளிக்காட்டினார். திருகோணமலையில் விக்னேஸ்வரன் கொலை செய்யப்பட்டமைக்கும் ஆழ்ந்த அனு தாபத்தை ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேவேளை, குற்றவாளிகளைக் கைது செய்வதற்கான உத்தரவையும் பொலீஸாருக்கு அவர் பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் அவிசாவளை போன்ற இடங்களிலும் இடம்பெற்ற சம்பவங்களை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது என்ற செய்தியை நாடாளுமன்றத்தில் தெரிவிக்குமாறு ஜனாதிபதி என்னைப் பணித்துள்ளார். இச் சம்பவங்கள் தொடர்பாக குற்றவாளிகளைக் கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதையும் அவர் என்னிடம் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் கொலைச் சம்பவமும் இதில் அடங்கும். இது தொடர்பான விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஜனநாயக விரும்பிகளாகவும் முதிர்ச்சியடைந்த சமூகத்தவர்களாகவும் நாம் இருப்பதால், இவ்வாறான துரதிஷ்டவசமான சம்பவங்கள் இனியும் நடைபெற நாம் அனுமதிக்கமாட்டோம். நாட்டின் இறமையையும், மக்களையும் பாதுகாக்கும் வண்ணம் சட்ட ஒழுங்கைப் பின்பற்றி நேர்மையான முறையில் செயற்படுமாறு நாம் பொலீஸாரையும் படையினரையும் பணித்துள்ளோம். இதைத்தான் எமது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை, ஜெனீவாப் பேச்சை மீளத் தொடங்குவதற்கான சாதகமான சூழலை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

புலிகள் பாதுகாப்புப் படையினர் மீதும் பொதுமக்கள் மீதும் மேற்கொண்டுவரும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும், புலிகளுக்கு ஹெலிக்கொப்டர் வசதிகளைச் செய்துகொடுக்க அரசு மேற்கொண்ட நெகிழ்ச்சித்தன்மை கொண்ட நடவடிக்கைகளுக்கு உடனடியாகப் புலிகள் பதில் கூறவேண்டும் என்றும் நாம் கேட்கின்றோம்.

இது தொடர்பாக அரசு கொண்டிருக்கும் நெகிழ்வுத்தன்மை பதிவில் வைக்கக்கூடிய ஒன்று. இவ்வருடம் மார்ச் மாதம் 26ஆம் திகதி புலிகளின் 06 பேரை மட்டக்களப்பில் இருந்து கிளிநொச்சிக்கும், மேலும் 06 பேரை திருகோணமலையில் இருந்து கிளிநொச்சிக்கும் கொண்டுசெல்லவும் அதே எண்ணிக்கையானோரை திரும்ப மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் கொண்டுவருவதற்கும் ஹெலிக்கொப்டர் தேவை எனப் புலிகள் அரசிடம் கேட்டனர்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்குப் பின்பு புலிகளின் உள்ளூர் பயண ஏற்பாடுகள் குறித்த அரசின் நிலைப்பாடு என்னவென்பதை நாம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெளிவாக அறிவித்தோம்.

அந்தவகையில், சமாதான முன்னெடுப்பு சம்பந்தமாகவும் புலிகளின் தலைவர்கள் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்களுக்கு உதவும் வகையில், அவர்களை விமான நிலையங்களுக்குக் கொண்டுவர ஹெலிக்கொப்டர் வசதி வழங்குவதையே அரசு தனது நிலைப்பாடாகக் கொண்டிருக்கிறது. ஆனால், உள்ளூர் பயணங்களுக்கு அல்ல.

இருப்பினும், உள்ளூர் பயணத்திற்கு, பாதுகாப்புப் படையினருடனான போக்குவரத்து, கடற்படையினரின் படகு மற்றும் தனியார் படகு போன்ற போக்குவரத்து வசதிகளை அரசு முன்வைத்தது.

புலிகள் குறிப்பிடும் எண்ணிக்கை கொண்ட புலிகளின் உறுப்பினர்களை ஏற்றிச் செல்லக்கூடிய சீ - பிளேனை ஏற்பாடு செய்யும் விடயம் தற்போது ஆராயப்படுகின்றது.

அதை எங்கு இறக்குவது என்று தொடர்ச்சியாகப் பல நீர்நிலை இடங்களைப் பட்டியல்படுத்திக் காட்டினர் புலிகள். இதை அரசு ஏற்று அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக சிவில் விமான சேவை அதிகார சபை மற்றும் விமானத்துறை இயக்குநர் நிறுவனத்துடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது புலிகள் போக்குவரத்து முறைமையை ஏற்றுக் கொள்ளவர் என நாம் நம்புகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடான தமது செல்வாக்கைப் பயன்படுத்தி புலிகளைப் பேச்சுமேசைக்கு அழைத்துவர அவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அழுத்தங்களை வழங்கவேண்டும் என நிமல் சிறிபாலா அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட, கிழக்கு மாகாணத்திற்கான புற்றுநோய் உதவி
(CANCER AID FOR NORTH & EAST)
பராமரிப்பு விடுதிகளுக்கான கட்டட வேலைகள்

## ஆர்வம் காட்டல்

1. பிரித்தானியாவின் C.A.N.E. நிறுவனத்தின் அனுசரணையில் ரூபா7மில்லியன் பெறுமதி மிக்க இரு கட்டடத் தொகுதிகள் மருதனார் மடத்தில் அமையவுள்ளன.
2. இதற்கான கேள்வி கூறலில் பங்குபற்ற ஆர்வமுள்ள கட்டட நிர்மாணிதாரர், பின்வரும் மதியுரைஞர் நிறுவனத்துடன் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர்தொடர்பு கொள்ளவும்.

*உருத்திர பொறியியல் கட்டடக் கலை மதியுரை அகம்,*
இல. 06, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

*நிர்வாக முகாமையாளர்,*
C.A.N.E. நிறுவனம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
மருதனார்மடம்.

(50158)

---

சாவகச்சேரி - சங்கத்தானை வைரவ சுவாமி
கந்தசுவாமி ஆலய பரிபாலன சபை

## பொதுக்கூட்ட அழைப்பு

எதிர்வரும் 28.05.2006 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு ஆலய பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெறும். பிரேரணைகள் இருப்பின் 21.05.2006இற்கு முன்னர் தலைவருக்கு அனுப்பி வைக்கவும்.

*-ஆலய பரிபாலன சபை.*

(50152)

---

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி



"உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது"

வாழும் வரை வாழவைத்து
வளர்த்தெடுத்து எமை அன்பில்
ஆளுபவராய் இருந்த எம் அன்னை எங்கள்
எண்ணமதில் மட்டுமன்று. என்றென்றும்
நித்தியமாய் விண்ணிறைவன் பொன்னடியில்
வாழவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

*திருமதி கந்தையா சிங்காரம்*
அவர்களின்

ஆன்ம இளைப்பாற்றிற்காக 13.05.2006 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் நன்றி செலுத்தும் ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*

*திரு. திருமதி நாகேஸ்வரன் - வனிதா*
*குடும்பத்தினர்.*

(50165)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

*தோற்றம்* 01 * 11 * 1946



*மறைவு* 13 * 04 * 2006

## யாகப்பர் சுகிர்தலங்காரம்

கடந்த 13.04.2006 இல் இறைபதமடைந்த அமரர் யாகப்பர் சுகிர்தலங்காரம் அவர்களின் ஆத்மசாந்திக்கான திருப்பலி ஒப்புக் கொடுத்தல் நாளை (13.05.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து அன்னாரது வீட்டில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிச்சடங்கு நடைபெற்ற அன்று கண்ணீர் அஞ்சலி செலுத்திடும் பலவழிகளில் உதவிகள் ஆற்றிய CARE நிறுவனம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*புனித அந்தோனியார் வீதி,*
*சுன்னாகம்.*

**குடும்பத்தினர்.**

(50153)

---

## சமய சந்நிதிகளில்....

யாழ்ப்பாணம்,மே12

புங்குடுதீவு மத்தி புனித பிரான்ஸிஸ் சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 19ஆம் திகதி நற்கருணை விழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

திருவிழா வழிபாடுகள் பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் தலைமையில் நடைபெறுகின்றன.

***

யாழ்ப்பாணம்,மே12

மாங்குளம், அம்பலகாமம் ஸ்ரீ மம்மில் பிள்ளையார் ஆலய சித்திரா பௌர்ணமி தின விசேட பூஜைகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 9.30 மணிக்கு அபிஷேகமும் நண்பகல் 12.30 விசேட பூஜையும் நடைபெறும். இரவு கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

***

கோப்பாய்,மே12

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்தோற்சவமும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கும் நடைபெறவுள்ளன. (72)

***

யாழ்ப்பாணம்,மே12

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் சித்திரை மாத அகண்டநாம பஜனை உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை நடைபெறும்.

இப்பஜனையில் இசைவல்லுநர் களையும் வாத் தியங்கள் இசைப் போரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபை கோரியுள்ளது. (15)

***

யாழ்பாணம்,மே12

உடுப்பிட்டி சந்தி வல்வை வாழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இந்த உற்சவகாலத்தில் தினமும் அன்னதானம் நடைபெறும். (15)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவி புரிந்தவரும் நலன் விரும்பியுமான அமரர் ஜோர்ஜ் ஞானாலி 07.05.2006 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

யா/சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலை,
சுன்னாகம்.

அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(50160)

---

## SRI LANKA RED CROSS SOCIETY
### AUSTRALIAN RED CROSS

Australian Red Cross (ARC) is supporting Sri Lanka Red Cross Society (SLRCS) in implementation of Community-based First Aid Programme for the Tsunami affected.

VACANCY

**Health Coordinator - First Aid - Jaffna Branch**

QUALIFICATION & EXPERIENCE REQUIRED
* University Degree in the field of Health or Science or Social Science.
* A minimum of three (03) years working experience in Community-based Development Projects.
* Experience as a First Aid instructor

DUTIES & RESPONSIBILITIES
* Plan, facilitate, develop train and guide the volunteers in monitoring and in implementation of the project
* Develop database for First Aid instructors and providers and keep records
* Prepare financial reports and submit to the SLRCS National headquarters, Branch headquarters and to the ARC in a timely manner.
* Translate, Interprete and carryout all the project duties and follow up purchase and procurement of equipments necessary to the First Aid project.
* Prepare work and movement plans and submit them to ARC delegate and to SLRCS National headquarters. Pls and Branch headquarters.

SKILLS REQUIRED
* Excellent command in Tamil and English language skills with working knowledge of Sinhala is an advantage
* Computer literacy
* Good managerial, communication, leadership and interpersonal skills
* Excellent networking and facilitating skills

Only the short listed candidates will be contacted for the interviews.
Applications should be submitted no later than 24th May 2006 to:

Chairman
Jaffna Branch
Sri Lanka Red Cross Society,
73 Kandy Road, Jaffna.

Please quote the references number hrm 0152 on top left hand corner of the envelope.

(C-49247)

---

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பம், 1979இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுடைய மணமகனுக்கு நற்குணம்,கல்வியறிவுடைய மணமகளும் றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பம் 1960இல் பிறந்த அரச நிரந்தர தொழில்நுட்பவியலாளருக்கு மணமகளும் தேவை . தொடர்பு: யோசேப்,மாரீசன்கூடல், இளவாலை. **T.P**: 0779672462.

(50100)

### விற்பனைக்கு

வீடியோ கமரா, (பன சொனிக் m9000), போட்டோ கமரா (Fm10 லென்ஸ் 1.4), டெக்னிக்ஸ் (BOX) யமஹா (TZR ஜப்பான்), ப்ரோலைட் (300D), ஸ்ருடியோ திரைச் சீலைகள், கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776118667.

(50082)

### வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 4202623. (சி/49187)

### தவறிவிட்டது

இணுவில் தெற்கு என்ற முகவரியை உடைய கலாநிதி நடராஜா என்பவருடைய தே.அ.அட்டை(இல.606361114x), விசேட அடையாள அட்டை(0906015120), தொழில் அடையாள அட்டை(சுன்னாகம் **M.P.C.S. Ltd.**) மற்றும் யாதவன் சிவானந்தன், யதுகுலன் சிவானந்தன் ஆகியோருடைய (கொக்குவில் இந்துக்கல்லூரி) பாடசாலை அடையாள அட்டை என்பனவும் வைத்திய சாலைப் பகுதில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் [illegible] முகவரியில் ஒப்படைத்துதவவும். அண்ணா கோப்பி, புதிய சந்தை, யாழ்ப்பாணம். **T.P.** 2380, 5569

(50154)

---

## கனவுகள் கலைந்து ஆண்டுகள் நான்கு...

மலர்வு 24 - 10 - 1950



உதிர்வு 26 - 04 - 2002

அமரர் **வைரவி சுபாஸ்**
*திதி: சித்திரா பௌர்ணமி*
*(12.05.2006)*

மண்ணிலே எம்மை மாண்புற வாழவைக்க
வழிகாட்டியாய் இருந்தீரே....
எண்ணக் கனவுகள் ஈடேறுமுன்பே...
சட்டென்று போக்கினரே பாதகர் உம்முயிரை....
உம்பிரிவால் துயருறும்

அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(50162)

---

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை



திருமதி **அன்னபூரணம் பாலசிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு
துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(50164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

எங்களிடம் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்தவர்கள் இது காலவரையும் புத்தகப் பதிவை மேற்கொள்ளாவிடின் அவர்கள் உடனடியாக வந்து அப்புத்தகப் பதிவை மேற்கொள்ளவும்.

அவ்வாறு செய்யாவிடின் புத்தகப் பதிவுக்குரிய ஆவணங்களை நாட்டின் நிலைமையையிட்டு நாங்கள் பாதுகாத்து வைத்திருக்கமுடியாது என்பதனை அறியத்தருகின்றோம்.

**சிவகுரு உந்துருளி வாணிபம்**

**A-9 சாலை, பரந்தன்.** (சி/41242)

# எட்டாவது வருட நினைவஞ்சலி



தோற்றம் 22 - 06 - 1956

மறைவு 11 - 05 - 1998

## சுப்பிரமணியம் தனபாலசிங்கம்(சந்திரன்)

**(ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

ஆண்டுகள் எட்டு ஆனாலும் அழியவில்லை - எம்
மனத்துயரும் அன்பையும் அரவணைப்பையும்
எம் மீது கொட்டி எமக்கெல்லாம் உறுதுணையாய்
இருந்த எமதன்புத் தலைவனே!
எமையெல்லாம் துன்பக் கடலில் தவிக்கவிட்டு
நீர் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் - அப்பா.

*பொற்பதி றோட்,*
*கொக்குவில்.* (50031)

மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்.

சீட்டிழுப்பு இல. 1708

10.05.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

03 15 54 67 (15)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201146767 இலிருந்து 201162091

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 56,06,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 56,06,750/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 2 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 31 | 5,000/- | 1,55,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 396 | 1,000/- | 3,96,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,275 | 500/- | 6,37,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,541 | 40/- | 7,81,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,515 | 20/- | 3,70,300/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,77,717 | 10/- | 27,77,170/- |
| மொத்தம் | | - | 71,17,610/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , சைக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,17,482 | | 77,17,610/- |

தொடர் இல. 301076237 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 மே மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 63,48,800/-

| | |
|---|---|
| நுவரெலியா | 201149116-5-26 |
| களுத்துறை | 201161730-3-35 |
| கொழும்பு | 201160297-5-57 |
| கண்டி | 201151075-3-51 |
| காலி | 201156369-6-61 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் வியாளம்மா



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வியாளம்மா (விசாலாட்சி) நேற்று (11.05.2006) வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும் பஞ்சலிங்கம்(ஓய்வுபெற்ற தபால் சேவகர்), திருநாவுக்கரசு(வர்த்தகர்-கொழும்பு), புவனேஸ்வரி, விக்கினேஸ்வரன் (விக்னா தேயிலை),தனலட்சுமி, மங்கையர்க்கரசி, சற்குணதேவி (ஜேர்மனி)ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.05.2006) வெள்ளிக்கிழமை பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஞ்சவனப்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (50178)

தகவல்
சு.திருநாவுக்கரசு(மகன்),
சு,விக்கினேஸ்ரன்(மகன்).

# உயர்தரப் பரீட்சை ஆளணியினருக்கு

யாழ்ப்பாணம்,மே12

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களையும் கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ். வலயம் II இற்கு உட்பட்ட ஜி.சீ.ஈ. உயர் தரப்பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மேற்படி பரீட்சைக்கென நியமிக்கப்பட்ட ஆளணியினரை இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே12

ஜி.சீ.ஈ. உயர் தரப்பரீட்சைக்கு கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம், தீவகம் மற்றும் தென்மராட்சி வலயங்களில் இணைப்பு நிலையங்களிலும் கடமையில் ஈடுபடவுள்ள ஆளணியிருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தல் கூட்டத்தில் இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்.

# செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட தமிழ்மொழிப்பாட ஆசிரியர்களுக்கு இன்றும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,மே12

ஊரெழு கணேசா வித்தியாலயம்,கோப்பாய் றோ.க.த. பாடசாலை,நல்லூர் ஞானோதயா வித்தியாலயம்,திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# ஓய்வூதியம் நேற்று வழங்கப்பட்டது

மண்டைதீவு,மே12

பணிப்புறக்கணிப்பு தொடர்ந்து இடம்பெற்றுவரும் அதேநேரத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வங்கிகள் விசேட தீர்மானத்திற்கு அமைவாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகளை நேற்றுக் காலை வழங்கின.

நேற்றுமுன்தினம் பெரும்பாலான வங்கிகளின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒரு மணித்தியாலமே நடைபெற்றன. இதனால் ஓய்வூதியம் பெற வந்தவர்கள் வங்கிக் கிளைகளில் காத்திருந்த பின் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

நேற்று அதிகாலையில் நகர வங்கிகளில் வாடிக்கையாளர் நீண்ட வரிசையில் காணப்பட்டனர். ஆயினும் ஓய்வூதியக் கொடுப்பனவு மட்டுமே பெரும்பாலான வங்கிகளில் வழங்கப்பட்டது.

பெரும்பாலான வங்கிகள் ஒற்றைக் கதவிலேயே திறந்திருந்தன. சில பின்புறக் கதவுகளூடாகவே ஓய்வூதியம் பெறுவோரை அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 * 03 * 1934

மறைவு 11 * 05 * 1998

## திருமதி இரத்தினம் சண்முகம்

திதி:12.05.2006 (சித்திரை பௌர்ணமி)

எம்மோடு நீ இல்லாத
ஆண்டுகள் எட்டு
இன்றும் எம் இல்லத்தில்-நீ
தங்கத் தட்டு!
பொன்னோடு புகழ்தேடிச் சென்றாலும்
பூவுலகை விட்டு
என்றும் எம் இதயத்தில்-நீ
முகிழ்கின்ற மொட்டு!

மு.சண்முகம்,
57,மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (50066)

*என்றும் உன் நினைவுடன்:*
கணவர்,மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

# ஐந்து வருடமானாலும் நெஞ்சம் மறக்குமோ உங்களை



அன்னை மடியில் 20 - 03 - 1918

ஆலடியான் திருவடியில் 10 - 05 - 2001

## அமரர்.நாகர் கிருஸ்ணபிள்ளை(செட்டியார்)

திதி .3.05.2006

வாரிக் கொடுத்திங்கு வள்ளலாய் வாழ்ந்தவரே!
வகையறுத்து பிறர்துயர் களைந்துமே மகிழ்ந்தவரே!
யாரிடமும் கையேந்தாத தலை சாயாத பெருந்தகையே!
ஞாலமதில் செட்டியாரென பெயரெடுத்தபெருநிதியே!
பாரறிய ஆலடியான் ஆலயத்தை வளர்த்தவரே!
பரிவுடனே உறவுகளின் பசி துயர் களைந்தவரே!
யாரிவரென யார் யாரோ நன்றியற்று கேட்டாலும்!
யாமிங்கு மறவோமே! ஐயாவே இது நிஜம்.

*தவமஹால்*
*அல்வாய்.* (50161)

- பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பத்மாவதி நடேசபிள்ளை

அன்பின் அம்மாவே!
இல்லறத்தில் நல்லறம் புரிந்து
பார்போற்றும் எழுவரை
தமிழுக்கும் தமிழ் மண்ணிற்கும் பெருமை சேர்க்க
பெற்றெடுத்த தவத்தாயே
இந்துவின் மைந்தர்களாய் உன் பிள்ளைகளை
உலகிற்குத் தந்த தாயே
உன் பிரிவால் வாடுகின்றோம் அம்மா.

(சி/41251)

கா.சிவகுமார்(Swiss),
K.கணபதிப்பிள்ளை(Swiss)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறு அறிவித்தல் வரையும் பணிப் புறக்கணிப்பு தொடரும்

## தமிழ்த் தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே12

யாழ். குடாநாட்டில் மறு அறிவித்தல் வரை பணிப்புறக்கணிப்புத் தொடர்ந்து இடம்பெறும் என்று தமிழ்த்தேசியத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பிரிவு நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சனிக்கிழமை முதல் யாழ். குடாநாடு எங்கும் இடம்பெற்றுவரும் பணிப்புறக்கணிப்பு ஸ்ரீலங்கா அரசைப் பெரும் இக்கட்டில் ஆழ்த்தியுள்ளது. தமிழ்த் தேசத்தின் பற்றாளர்களைப் படுகொலைசெய்துவந்த அரசின் புலனாய்வுத்துறையினரும் ஒட்டுப் படையினரும் தட்டிக்கேட்பார் எவருமில்லாத காரணத்தினால் கொத்துகொத்தாக எமது இளம்குருத்துக்களை புத்தூரிலும், நெல்லியடியிலும், மந்துவிலிலும் கொன்றொழிக்க ஆரம்பித்தவேளையிலேயே யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் பணிப் புறக்கணிப்புக்கான வேண்டுகோளை முன்வைத்தது.

கொடூரமுகம் படைத்த; ஆயுதம் தாங்கிய அரக்கர்களை எதிர்த்து நிராயுதபாணிகளான அரச நிர்வாகப் பணியாளர்கள் மேற்கொண்டுவரும் மௌனயுத்தம் அரசைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. நேற்றுமுதல் இராணுவ அதிகாரிகள் தமிழ்ப் பணியாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் பணிப்புறக் கணிப்பினை முறியடிக்கும் முனைப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த அச்சுறுத்தல்களுக்கு எவரேனும் அடிபணியவேண்டாமென நாம் வேண்டுகின்றோம்.

எமது உடல்களை சுட்டுவீழ்த்தினும் எமக்குள் இருக்கும் தமிழ்த்தேச ஆன்மாவை ஒருபோதும் வீழ்த்திவிட முடியாது என்பதை எதிர்வரும் தினங்களில் அரசுக்கு நன்கு உணர்த்துவோம். தமிழ்த்தேசத்தின் ஒவ்வொரு தொழிற்சங்கமும் தனது அங்கத்தவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதை தயவுசெய்து உறுதிப்படுத்திக்கொள்ளவும். அநாவசியமான முறையில் தமது பணியிடங்களுக்குச் செல்வதையும், வரவுப்பதிவேட்டில் கையெழுத்திடுவதையும், நிர்வாகிகள் வரவினை வலியுறுத்துவதையும் தவிர்க்கும்படி தனது அங்கத்தவர்களை வேண்டிக்கொள்ளுமாறு தொழிற்சங்க நிர்வாகங்களை நாம் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனிதாபிமான அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த சகல அரச நிர்வாகப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பணிப்புறக் கணிப்பு பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் மறு அறிவித்தல்வரும்வரை தொடர்ந்து இடம்பெறும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பணிப்புறக்கணிப்பு ஆறாவது நாளில்!

யாழ்ப்பாணம்,மே 12

படையினரின் அராஜகங்களைக் கண்டிக்கும் வகையில் யாழ். குடாநாட்டில் ஆறாவது நாளாகப் பணிப்புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது.

செயலகம், பிரதேச செயலகங்கள் உட்பட சலக அரச திணைக்களங்களுக்கும் பணியாளர்கள் சமுகமளிக்காததால் அவை செயலிழந்தது காணப்பட்டன.

வங்கிகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக ஒரு மணிநேரம் மட்டுப்படுத்தப்பட்ட சேவையை வழங்கின.

பொதுப்போக்குவரத்துக்களும் சீர்குலைந்திருந்தன. அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தபப்ட்ட அளவில் இடம்பெற்றன.

வர்த்தக நிறுவனங்கள் உட்பட அத்தியாவசிய சேவை நிறுவனங்கள் திறக்கப்பட்டு இருந்தன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. (ம-190)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் மறைவுக்கு பிரபா அனுதாபம்

கொழும்பு, மே 12

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறுவ் ஹொவ்டேயின் மறைவிற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ரொண்ட் புறுவ் ஹொவ்டே நோர்வேயில் நேற்றுக் காலை காலமானார். இவரது மறைவிற்கு அனுதாபம் தெரிவித்து விடுதலைப்புலிகளின் தலைவர் நேற்றைய தினமே கடிதமொன்றை அவரது குடும்பத்தினருக்கு அனுப்பிவைத்தார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் தாயகத்தில் அமைதி நிலையை உருவாக்குவதற்காக - நிலை நாட்டுவதற்காக, மிகவும் பிரச்சினைக்குரிய காலகட்டத்தில் - மிகவும் கடினமான பணியைச் செய்த கண்காணிப்புக் குழுவின் தலைவராகப் பதவி வகித்து அவர் சிறப்பாகப் பணியாற்றினார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கான பங்களிப்பைக் கண்காணிப்புக் குழுத்தலைவர் பொறுப்பிலிருந்து மிகச் சிறப்பாகச் செயற்படுத்தினார்.

சமூக நீதித் தன்மையோடும், நடுநிலைமையோடும் புறுவ்ஹெவ்டே ஆற்றிய அரும்பணிகள் என்றும் பாராட்டுக்குரியன. இவரது மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-15)

## அம்புலன்ஸ் சேவை குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே12

இரவுநேரத்தில் அம்புலன்ஸ் சேவை நடத்துவது தொடர்பாக அம்புலன்ஸ் வைத்திருக்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இரவுநேரம், ஊரடங்கு நேரம் போன்ற காலத்தில் அம்புலன்ஸ் சேவை நடத்துவது குறித்துக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றது.

## கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு உண்டு என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முரணான வகையில் கடலில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் அனைத்து நடமாட்டங்களையும் நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

முன்யோசனையற்ற இந்த நடவடிக்கை அதிகரிக்கும் விரோதத்தை மேலும் பரப்புவதால் எதிர்காலத்தில் சாத்தியமாகக்கூடிய சமாதானப் பேச்சுகளையும் ஆபத்துக்குள்ளாக்கும்.

இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்காமல் முடிந்தவரையில் பொறுமைகாக்குமாறு இலங்கை அரசைக் கோருகின்றோம் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## புலிகள் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர் பழைய இறங்குதுறையில் தரித்திருந்த கடற்படைப் படகு மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் இதில் படகு சிறிது சேதம் அடைந்தது என்றும் படைத் தரப்புத் தெரிவித்தது. அதற்குப் பதிலாகவே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. (ம)

## வலிந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புண்பட்டனர்.

நடந்த சண்டையில் கடற்படையினரின் டோறா படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. 15 இற்கும் 17 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான கடற்படையினர் கொல்லப்பட்டனர்'' - இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## வடமராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் கடலில்சண்டை இடம்பெற்றது எனக் கூறப்படுகிறது.

சண்டை இடம்பெற்றுக்கொண்டிருந்த போதே துருப்புக்காவிக் கப்பல் இந்துமா கடலின் சர்வதேச பிராந்தியத்திற்குள் தப்பிச் சென்றது. அதில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் இருவரும் இருந்தனர். அவர்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தப்பிச்சென்ற துருப்புக்காவிக் கப்பலுக்குப் பின்னர் இந்தியக் கரையோரக் காவல் படை தாக்குதல் படகுகள் பாதுகாப்பு வழங்கின. அவற்றின் வழித்துணையுடன் நேற்றிரவு கப்பல் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

இந்தத் தாக்குதல் போர்நிறுத்த ஒப்பந்த மீறல் என்று கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்தனர்.

''விடுதலைப் புலிகளின் சுமார் 15 படகுகள், 710 துருப்பினரை ஏற்றிச்சென்ற எமது கப்பல்மீது தாக்குதல் நடத்தின. அவற்றில் தற்கொலைப் படகுகளும் அடங்கியிருந்தன'' - என்றார் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க.

துருப்புக்காவிக் கப்பலுக்குப் பாதுகாப்பாக வந்துகொண்டிருந்த அதிவேக தாக்குதல் படகுகள் புலிகளுடன் சண்டையில் ஈடுபட்டன. அவற்றில் ஒன்று தற்கொலைத் தாக்குதலில் அழிக்கப்பட்டது. அதில் 15 முதல் 20 வரையானோர் இருந்தனர்'' - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தமது பதில் தாக்குதலில் குறைந்தது புலிகளின் 5 படகுகளாவது அழிக்கப்பட்டன என்றும் 30 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

இந்தத் தாக்குதலில் பி 418 என்ற இலக்கமுடைய டோறாப் படகே மூழ்கடிக்கப்பட்டது. தாக்குதலில் தமது தரப்பில் நால்வர் உயிரிழந்தனர் என்று புலிகள் தெரிவித்துள்ளனர். (ம)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பும் வேளையில் இத்தாக்குதலை மேற் கொண்டுள்ளன என்று கூறப்பட்டது.

இத்தாக்குதலில் பொது மக்கள் இருவர் காயமடைந்தனர் என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

அதேவேளை- நாகர் கோயில் முகாமில் இருந்து கரையோரப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சேதவிவரம் உடன் தெரியவரவில்லை. (ம)

## திருகோணமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்திருந்த திருமலை மாவட்ட பொங்கு தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட பொங்குதமிழ்ச் சமூகத்தினர் இன்றும் நாளையும் ஹர்த்தாலைக் கைவிட்டு வழமையான பணிகளில் ஈடுபடுமாறு பொதுமக்களுக்கு நேற்று மாலை அறிவித்தனர்.

வடக்கு - கிழக்கில் அரச படைகளும் அவற்றோடு சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளும் இணைந்து மேற்கொண்டுவரும் வன்முறைகள் திருமலை மூதூர் பிரதேசத்தில் அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்றவற்றைக் கண்டித்து நேற்றும், இன்றும், நாளையும் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி திருகோணமலை பொங்குதமிழ்ச் சமூகம் முன்னர் அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கிணங்க நேற்று மக்கள் தமது அன்றாட பணிகளைப் புறக்கணித்து அரச பயங்கர வாதத்துக்கு எதிரான தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அரச அலுவலர்கள் கட்டாயம் கடமைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்று வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரால் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அரச அலுவலகங்களில் குறைந்தளவு பணியாளர்களே கடமைக்கு வந்திருந்தனர்.

மாணவர்கள் வரவின்றிப் பாடசாலைகளும் வெறிச்சோடிக் கிடந்தன.

போக்குவரத்துச் சபையின் பஸ்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபட்டிருந்தன.

இன்றும் நாளையும் தொடர்ந்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருந்த போதிலும் 'வெசாக்' தினத்தை முன்னிட்டு இரு நாள்களும் இயல்பு நிலையைக் குழப்பாமல் ஒத்துழைப்பு வழங்குமாறு பௌத்த குருமார்கள் பொங்குதமிழ்ச் சமூகத்தினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட பொங்குதமிழ்ச் சமூகம் மதப் பெரியார்களுக்கும், சமய அனுட்டானங்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் ஹர்த்தாலைக் கைவிட்டு வழமையான பணிகளில் ஈடுபடுமாறு பொதுமக்களைக் கேட்டுள்ளது. (ம-க)



### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி இலட்சுமிப்பிள்ளை விசுவநாதர்

*குல தெய்வமே!*
*நீங்கள் எங்களை விட்டு*
*மறைந்தாலும்*
*உங்கள் நினைவுகள்*
*எம்மை விட்டு எப்போதும்*
*விலகாது*

12.04.2006 அன்று சிவபதமடைந்த எமது குலதெய்வத்தின் மறைவையடுத்து எமக்கு நேரில் வந்தும், தொலைபேசி, கடிதம் மூலமாக ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும் இன்று வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

பேராலை, பளை.

இங்கனம் குடும்பத்தினர்





BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்.
A/L - 2007
PHYSICAL CHEMISTRY
இரசாயனச் சமநிலை
By: DIAS
ஆரம்பம்: 13.05.2006
Sat. 3.00 p.m.





LOGIC
A/L 2008
ஆரம்பமாகியுள்ளது
P.கமல்
Sat.,Sun.
UNIVERSAL



### மரண அறிவித்தல்

## கந்தசாமி சீனிவாசகம் - J.P.



**(முன்னாள் வவுனியா மகாவித்தியாலய அதிபரும், வவுனியா வடக்கு, உதவிக் கல்விப் பணிப்பாளரும்)**

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் இல. 20, கரப்பன்காடு, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சீனிவாசகம் அவர்கள் நேற்று (11.05.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (இ.போ.ச. பரிசோதகர்) - வள்ளியாச்சி தம்பதியரின் மூத்த மகனும், நயினாதீவைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சாருகாசினி (முன்னாள் அதிபர், பண்டாரிகுளம் விபுலானந்தா மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும் சசிகரன் (பிரான்ஸ்), மேகலை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலா (வவுனியா), றெஜியன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது வவுனியா இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 14.05.2006 ஞாயிற்றுக்கிழமை தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*
*தொ.பே.: 222 5981*
(50150)

தகவல்:
நா.கிருஷ்ணமூர்த்தி
(அப்புத்துரை - சகோதரன் -
ஓய்வுபெற்ற சாரதி
இ.போ.ச.காரைநகர் சாலை)

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org